# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2010

# தமிழ்மொழி

## ஆண்டு 7

நேரம்: 150 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) தேர்விடை வினா - விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. மாந்தரிடம் கலையுணர்வு தோன்றுவதற்குக் கரணியமாய் அமைவது

அ) அழகுணர்ச்சி ஆ) கலையில் ஆசை இ) பணம் ஈ) அயலவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. தமிழிசையுள் வடமொழி நுழையுமுன் ஏழிசையைக் குறித்தவை

அ) குற்றெழுத்துகள் ஆ) நெட்டெழுத்துகள்

இ) மெய்யெழுத்துகள் ஈ) மெல்லெழுத்துகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தமிழர் கலைகளை எத்தனையாக வகுத்தனர்?

அ) இருபத்துநான்கு ஆ) நாற்பத்துநான்கு

இ) முப்பத்திரண்டு ஈ) அறுபத்துநான்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. தோற்கருவிக்குச் சிறந்த எடுத்துக்காட்டு

அ) யாழ் ஆ) குழல் இ) மேளம் ஈ) நாதசுரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. தொடருந்தைத் திடுநேர்கையில் இருந்து காப்பாற்றிய சிறுவன்

அ) மருதுபாண்டியன் ஆ) வீரபாண்டியன்

இ) பூதப்பாண்டியன் ஈ) பாண்டியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. ஒருபொருள் மின்னுவதைச் சுட்டும் இரட்டைக்கிளவி

அ) தளதள ஆ) பலபல இ) பளபள ஈ) கணகண

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. வடக்கே யாழ்ப்பாணக் கடலும் தெற்கே அநுராதபுரமும் கிழக்கே திருகோணமலையும் மேற்கே மன்னாரும் எல்லைகளாய் அமைந்த பெருநிலம்

அ) குமரிக்கண்டம் ஆ) வன்னி இ) மலைநாடு ஈ) இலங்கை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. தொல்பழங்காலத்தில் வன்னியில் வாழ்ந்த மக்கள் நாகர் என்பதற்குச் சான்று

அ) ஊர்ப்பெயர்கள் ஆ) ஆறுகள் இ) கல்வெட்டு ஈ) ஈமத்தாழிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. தமிழீழத்தின் பண்டைய தலைநகரங்களில் ஒன்று

அ) பருத்தித்துறை ஆ) மன்னார் இ) கந்தரோடை ஈ) ஆனைக்கோட்டை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. நாடாளும் மன்னன் இப் புலவருக்கு கவரி வீசினான்

அ) ஔவையார் ஆ) காளமேகம் இ) சோமசுந்தரம் ஈ) மோசிகீரனார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. வெள்ளத்திற்கு அடங்காத வாளை பாய்ந்து ஏறியது

அ) கமுகில் ஆ) தென்னையில் இ) முகிலில் ஈ) பலாவில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. யாழ்நூலை எழுதியவர்

அ) தனிநாயகம் அடிகள் ஆ) விபுலாநந்த அடிகள்

இ) இளங்கோ அடிகள் ஈ) சிவாநந்த அடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. ஞாலன் நாவலனைக் கூவி அழைத்தான். இதில் ஞாலன் என்பது

அ) 2ம் வேற்றுமை ஆ) 5ம் வேற்றுமை

இ) 8ம் வேற்றுமை ஈ) 1ம் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. இல்லறத்தார் செய்யவேண்டிய இன்றியமையாக் கடமைகளில் ஒன்று

அ) விருந்தோம்பல் ஆ) உழவு இ) போராடல் ஈ) இறைவழிபாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. இயற்கை உயிரினங்களுக்கு அளித்துள்ள சூழல் தொகுதி

அ) மலை ஆ) ஆறு இ) காடு ஈ) வீடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. **குறள்** - மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

_________________ குழையும் விருந்து.

கீறிட்ட இடத்தில் வரவேண்டிய சொல்

அ) பார்க்கக் ஆ) நோக்கக் இ) கேட்கக் ஈ) செய்யக்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. சிலப்பதிகாரக் காப்பியத்தின் உருவாக்கத்திற்குக் கருவாக இருந்தது

அ) சிலம்பு ஆ) கண்ணகி இ) மன்னன் ஈ)கோவலன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. சுட்டெழுத்துகள் என்று கூறப்படுபவை

அ) அ இ உ    ஆ) ஏ இ ஊ    இ) இ உ ஐ    ஈ) அ எ ஏ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. சோழநாட்டில் தொடங்கிய சிலப்பதிகாரக் கதை முடிவடைந்த நாடு

அ) சோழநாடு    ஆ) பாண்டியநாடு    இ) தமிழ்நாடு    ஈ) சேரநாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. 'போற்றல்' பாடலில் புகழ்ந்து கூறப்படும் தொழில்

அ) ஆட்சி    ஆ) நெசவு    இ) உழவு    ஈ) போர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. நெல் + வயல் = நெல்வயல். இப்புணர்ச்சி

அ) இயல்பு    ஆ) திரிதல்    இ) தோன்றல்    ஈ) கெடுதல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. நெல் + பயிர் இதைப் புணர்த்தினால்

அ) நெல்பயிர்    ஆ) நெற்பயிர்    இ) நெல்ப்பயிர்    ஈ) நெப்பயிர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. சிலப்பதிகாரக் கதையை இளங்கோவடிகளுக்குக் கூறியவர்

அ) கூலவாணிகன் சாத்தனார்    ஆ) கூலவாணிகன் நந்தனார்

இ) கூலவாணிகன் சித்தனார்    ஈ) கூலவாணிகன் கூத்தனார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. கி.மு மூன்றாம் நூற்றாண்டில் சிங்களரும் போற்றும்படி ஆண்ட தமிழ் மன்னன்.

அ) குத்திகன்    ஆ) இராசராசசோழன்    இ) எல்லாளன்    ஈ) துட்டகெமுனு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. உவமை அணிக்கு எடுத்துக்காட்டு

அ) முகமதி    ஆ) மதிமுகம்    இ) மதியொளி    ஈ) முழுமதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. தமிழ்நெடுங்கணக்கின் எண்ணிக்கை

அ) 215    ஆ) 217    இ) 246    ஈ) 247

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. கதிரவன் வரவு கண்டு செந்தாமரைகள் மலர்ந்தன. இச்சொல்லியத்தில் வந்துள்ள அடைமொழி

அ) வரவு ஆ) செம்மை இ) செந்து ஈ) மலர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. தரப்பட்டுள்ள சொற்களில் வினைச்சொல்

அ) கல்வி ஆ) கற்றான் இ) கற்பது ஈ) கல்லாத

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. அடுக்குத் தொடருக்குச் சரியான எடுத்துக்காட்டு

அ) நம்பிநம்பி ஆ) கன்னங்கரிய இ) தடதட ஈ) இன்பம்துன்பம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. இரும்புக் கடப்பாரைக்கு நெக்குவிடாத பாறை இதற்கு நெக்குவிடும்

அ) வெள்ளப்பெருக்கு ஆ) ஈட்டி இ) நெருப்பு ஈ) மரவேர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

இவ்வுலகில் இயற்கை எண்ணற்ற உயிரினங்களைப் படைத்துள்ளது. பறவைகள், நாற்கால் விலங்குகள், ஊர்வன, இருகால் உயிரியான மாந்தன் இப்படிப் பல. எல்லா உயிரினங்களையும் இயற்கை ஏதோ ஒருவகைத் தேவையின் பொருட்டே படைத்திருக்கிறது. இவ்வுயிரினங்களில் ஒரு பகுதி நிலைத்திணை (தாவரம்) உணவுகளையும் ஒரு பகுதி புலால் உணவுகளையும் உண்கின்றன. மாந்தன் தவிர்ந்த புலால் உண்ணும் அஃறிணை உயிரிகள் எல்லாம் தமக்குப் பசிக்கின்ற வேளையில் உணவுக்காகவே பிற உயிர்களைக் கொன்று தின்கின்றன. பழைய பகை என்றோ நான் தான் பெரியவன் என்றோ ஒருயிரைக் கொல்வதில்லை. சிலவேளைகளில் தன்னைக் காப்பாற்றும் நோக்கில் அச்சம் கரணியமாக சண்டையிடுகின்றன. ஆனால், மாந்தன் என்னும் உயிரி மட்டும் இன்னொன்றின் பொருளைப் பறிப்பதற்காக, இன்னொன்றினது சொத்துக்களைக் கொள்ளையிடுவதற்காக, தான் மட்டும் நன்றாக வாழ்வதற்காக ஒன்றையொன்று கொல்கிறது. அதுதான் பார்த்தோமே! அண்மையில் இலங்கையில் சிங்கள அரசு தமிழ் உயிரிகளைப் பல்லாயிரக் கணக்கில் கதறக்கதறக் குண்டு போட்டுக் கொலை செய்த கொடுஞ்செயலை. அச்செயலை உலகமெங்கும் வாழும் உயர்திணை உயிரிகள் பார்த்துக் கொண்டு கண்ணை மூடிக்கிடந்ததை. இதிலிருந்து நாம் புரிந்து கொள்வது என்ன?

1. அஃறிணை உயிரிகள் ஏன் பிறிதொரு உயிரைக் கொல்கின்றன?

______________________________

______________________________

2. மாந்த உயிரி ஏன் கொலைகளைச் செய்கிறது?

______________________________

______________________________

3. சிங்களம் கதறக்கதறக் கொன்றது எவ்வுயிரிகளை?

______________________________

______________________________

4. இவ் உலகில் காணப்படும் உயிரினங்களின் வகைகள் எவை?

5. சிங்களத்தின் மேற்கண்ட கொலைச் செயல் நடந்த இடம் எது? ஊகித்து எழுதுக.

(புள்ளிகள் 10)

## 3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு முழுவிடை தருக.

1. நுண்கலைகள் என்று அழைக்கப்படும் கலைகள் யாவை?

2. சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி என்ற குறள் மூலம் வள்ளுவர் சொல்ல வருவது என்ன?

3. ஈழத்திலே எவ்வெவ்விடங்களில் பண்டைய தமிழ் அரசுகளின் தலைநகரங்கள் இருந்தன?

4. குரங்குகள் ஏன் இளநீரைப் பறித்து எறிகின்றன?

5. கத்தரித் தோட்டத்துக் காவலன் எப்படி வேலை செய்கிறான்?

______________________________________________

______________________________________________

______________________________________________

6. ஈசன் உவக்கும் இன்மலர் மூன்றையும் தருக.

______________________________________________

______________________________________________

______________________________________________

7. சிலப்பதிகாரத்தைக் குறிக்கும் வேறு பெயர்கள் எவை?

______________________________________________

______________________________________________

______________________________________________

(புள்ளிகள் 10)

## 4) பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

விண்ணை முட்டும் மலையுச்சியிலே
வீழ்ந்த மழைத் துளியாற் பிறந்தேன்
மண்ணிற் சிறுதுளி பெருவெள்ளமெனும்
மாண்பு விளங்கிட ஊற்றெடுத்தே - ஆங்கே
குவிந்த மலையிடைப் பள்ளத்திலே
கட்டுக் குலையாது நான் வளர்ந்தேன்
எட்டாத தூரத்தின் மேலிருந்து - துள்ளி
ஏறியிறங்கிப் பாய்ந்து வந்தேன்
பாறை தடுத்திட மோதியெதிர்
பாய்ந்து நீர்வீழ்ச்சி யாய்த் தொடர்ந்தேன்
காட்டு மலைகளின் மீதிருந்து - வாசக்
கட்டையும் தட்டையுங் காவிவந்தேன்
குறிஞ்சி கடந்து முல்லைவந்தேன் - மலர்க்
குப்பையுங் கனிகளும் நான் கொணர்ந்தேன்
மருதக் குமரியைக் கண்டுமனம் - கொள்ளை
இன்பத்தில் மூழ்கிட மலர்விரித்தேன்

1. ஆறு எவ்வாறு உருவாகிறது?

2. சிறுதுளி பெருவெள்ளம் என்றால் என்ன?

3. எவ்வாறு நீர்வீழ்ச்சி தோன்றியது?

4. ஆறு காவி வந்த பொருட்கள் எவை?

5. ஆறு மருதநிலத்தைக் கண்டதும் என்ன செய்தது?

(புள்ளிகள் 10)

**5) அனைத்து இலக்கண / மொழியியல் வினாக்களுக்கு விடை தருக.**

1. அறுவகைப் பெயர்ச்சொற்களையும் தந்து, பொருட்பெயருக்கு எடுத்துக்காட்டுத் தருக.

2. சொற்புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவற்றின் பெயர்களைத் தருக.

3. மலர் போன்ற முகம். இந்த உவமைத்தொடரின் உவமானம் உவமேயம் பொதுத்தன்மை என்பவற்றைத் தருக.

______________________________

______________________________

______________________________

4. தரப்பட்டுள்ள மரபுத்தொடர்கள் பொருத்தமாக அமையச் சொல்லியங்கள் எழுதுக.

நறநற: ____________________

அருகருகாக: ____________________

அல்லும்பகலும்: ____________________

5. கண்ணன் என்ற பெயருடன் நீர் கற்ற வேற்றுமை உருபுகள் மூன்றையும் சேர்த்து எழுதுக.

______________________________

______________________________

______________________________

(புள்ளிகள் 15)

6) தரப்பட்டுள்ள பந்தியை தமிழ்மொழிக்கு மாற்றுக.

Auf einer blühenden Wiese mähten vier Ochsen Gras. Sie lebten friedlich zusammen. Die dicken Ochsen wurden von einem Löwen gesehen. Der Löwe wartete auf den Zeitpunkt und verletzte einen Ochsen. Daraufhin haben die anderen Ochsen gegen den Löwen gekämpft. Der Löwe ist weggelaufen. Aufgrund der starken Hitze wurde die Erde trocken und die Ochsen mussten hungern. Dadurch verschwand der Zusammenhalt der Ochsen. Der Löwe nutzte diese Gelegenheit, tötete und fraß jeden einzelnen Ochsen.

På en grøn græsplane græssede fire tyre. De levede enigt sammen. En løve fik øje på de fede tyre. På et godt tidspunkt angreb løven en af tyrene. Da modangreb de andre tyre. Løven løb væk. På grund af høj temperatur blev jorden tør og tyrene blev svage uden foder. Enigheden i mellem dem forsvandt også. På det tidspunkt dræbte og åd løven tyrene en ad gangen.

Four bulls lived together grazing in a flourishing pasture. They lived together. A lion found the well-fed bulls. The lion attacked a bull at an opportune moment. The other bulls attacked the lion. The lion ran away. In a drought, the pasture dried up and the bulls were hungry. They lost their fellowship. The lion used the opportunity to kill and eat them one at a time.

Fire okser beitet på en frodig slette. De levde sammen i fellesskap. En løve fikk øye på de fetede oksene. Ved første mulighet angrep løven den ene oksen. De andre oksene angrep løven tilbake. Løven fluktet. På grunn av den sterke sola tørket bakken ut, og oksene var utmattet av sult. Oksenes fellesskap ble brutt. Løven utnyttet seg av muligheten, og drepte og spiste oksene en etter en.

(புள்ளிகள் 05)

Dans une prairie d'herbe fraîche se trouvaient quatre taureaux qui broyaient. Ces taureaux vivaient heureux. Un lion a remarqué ces taureaux bien . A la première occasion, le lion attaqua un taureau, les autres taureaux se sont affrontés avec le lion. Puis le lion s'est sauvé. Le soleil tapé très fort, la terre sèche et les taureaux sont affaiblis. L'union des taureaux s'est cassée. Le lion saisit de cette occasion, tua et mangea chaque taureaux.

7) 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.

1. கத்தரித் தோட்டத்து வெருளி (காவலன்)

2. தொடருந்தைக் காத்த மருதுபாண்டியன்

3. இலைதளிர் காலம்

4. வன்னி மக்களைக் காப்போம்.

(புள்ளிகள் 20)